**உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டம் (புற நெகும) - 2016**

---

உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டத்தின் (புற நெகும) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 21 ஆம் திகதிய 2790–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவுள்ளதுடன் 07 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன. கணக்களிக்கும் பொறுப்பு, நிதிசார் மற்றும் தொழில்நுட்பரீதியாக பலப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளினூடாக முன்னேற்றமடைந்த உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மற்றும் பயனுறுதிமிக்க சேவை விநியோகம் என்பவற்றை அடைதல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,940 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 68.8 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,670 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு ஆரம்பத்தில் காணப்பட்டது. எவ்வாறாயினும், சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கெதிராக ஐ.அ.டொலர்களின் மதிப்பேற்றம் காரணமாக இணங்கப்பட்ட தொகையானது ரூபா 7,892 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 52.04 மில்லியனாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2017 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | | பயன்படுத்திய நிதிகள் - மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் - 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 52.04 | 7,892.00 | 19.73 | 2,899.71 | 17.50 | 2,571.95 | 45.02 | 6,149.07 |
| இலங்கை அரசாங்கம் | 9.77 | 1,270.10 | 2.89 | 424.33 | 2.86 | 420.46 | 8.11 | 1,102.92 |
| **மொத்தம்** | **61.81** | **9,162.10** | **22.62** | **3,324.04** | **20.36** | **2,992.41** | **53.13** | **7,251.99** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட தயார்படுத்தல் தொழில்நுட்ப உதவி அறிக்கையின் பொது நிபந்தனையின் பிரகாரம், செயற்திட்டமானது தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகள் ஒவ்வொன்றிற்கும் அவற்றின்

நிர்வாகக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய சமுதாய வசதிகளின் முன்னேற்றத்திற்கும் ரூபா 50 மில்லியன் தொகையை ஒதுக்கீடு செய்வதற்கு இணங்கியிருந்தது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி சபைகளினால் அமுல்படுத்தப்பட்ட சிவில் வேலைகள் மீதான பௌதீக செயன்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளன.

| **வேலைகளின் தன்மை** | **ஈடுபட்ட உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை** | **அபிவிருத்தி வேலைகள்** | |
|---|---|---|---|
| | | **செயற்திட்டக் காலப்பகுதியின் போது பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டது** |
| | **எண்ணிக்கை** | **எண்ணிக்கை** | **எண்ணிக்கை** |
| நிர்வாகக் கட்டிடங்களின் நிர்மாணம் | 39 | 40 | 37 |
| உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி | 21 | 21 | 19 |
| சமுதாய வசதிகளின் முன்னேற்றம் | 80 | 89 | 87 |
| நீர் வழங்கல் செயற்திட்டங்கள் | 18 | 25 | 16 |
| ஏனையவைகள் | 3 | 3 | 3 |

வடமேல் மாகாணத்திலுள்ள வனதவில்லுவ, மாஹோ மற்றும் கல்நேவ பிரதேச சபைகளாலும் மத்திய மாகாணத்திலுள்ள உடபலத பிரதேச சபையாலும் ஊவா மாகாணத்திலுள்ள ஹடுகமுவ, மஹியங்கனை மற்றும் மீகஹகியூல பிரதேச சபைகளாலும் அமுல்ப்படுத்தப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மீது ஒப்பந்தங்களை வழங்குவதிலுள்ள தாமதங்கள் காரணமாக 50 சதவீதம் தொடக்கம் 85 சதவீதம் வரையான வீச்சில் மெதுவான செயன்முன்னேற்றத்தை அறிக்கையிட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதி வரையிலும் அத்தகைய வேலைகளை பூர்த்திசெய்வதன் சாத்தியத்தன்மையை கணக்காய்வில் குறிப்பிட முடியாதிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுவான அம்சமொன்றாக, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களின் தரக் குறைபாடுகள் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கள விஜயங்களில் வெளிப்பட்டிருந்தன. இதன் விளைவாக, தென் மாகாணத்திலுள்ள நெலுவ பிரதேச சபையின் வாராந்த சந்தை வளாகத்தில் ரூபா 41.44 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மதில் சுவரின் பகுதியொன்று உடைந்து விழுந்திருந்தது. மேலும், தென் மாகாணத்திலுள்ள கரன்தெனிய, திஸ்ஸமஹாராம மற்றும் கடுவான பிரதேச சபைகளின் வளாகத்தில் ரூபா 80.39 மில்லியன் மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட எல்லைச் சுவர்கள் மற்றும் மத்திய மாகாணத்திலுள்ள கண்டி கடவத் சதர மற்றும் கங்காவத்த கொறளை பிரதேச சபைகளின் தென்னெகும்புரவால் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்குக் கட்டிடங்கள் என்பவற்றில் வெடிப்புக்கள் தோன்றியிருந்தன. பல உள்ளூராட்சி சபைகளால் அமுல்ப்படுத்தப்பட்ட சிவில் நிர்மாண வேலைகள் தர நியமத்தை பின்பற்றக் கூடியதாக சரியான முறையில் மேற்பார்வை செய்யப்படாதமையை உறுதிப்படுத்தியிருந்தது.

(ஆ) திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் வாராந்தச் சந்தையில் ரூபா 5.83 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 3,015 சதுர அடியை கொண்டிருந்த மீன் சந்தைக் கட்டிடம் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் வணிக நோக்கங்களிற்காக வர்த்தகரொருவரின் பாவனைக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. ஆகையால்,

செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மீது எதிர்பார்க்கப்பட்ட திரும்பல்களை ஈட்டுவதற்கு உரிய பிரதேச சபையால் முடியாதிருந்தது.

(இ) அகலவத்தை பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவ நிலையத்தில் ரூபா 32.09 மில்லியன் கிரயத்தில் நிறுவப்பட்ட பிளாஸ்ரிக் நொறுக்கும் இயந்திரம் மற்றும் பொலித்தீன் கெம்பக்ரர் (Compactor) என்பன மின்சார இணைப்புக்களில்லாமை காரணமாக 2017 யூன் 30 வரையிலும் பயன்படுத்தக்கூடிய நிலைமையில் காணப்பட்டிருக்கவில்லை. மேலும் வடமத்திய மாகாணத்திலுள்ள மஹைலுப்பள்ளம மற்றும் திரப்பனேயில் ரூபா 5.31 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட உர உற்பத்தி நிலையம் நீர் விநியோகிக்கப்படாமை காரணமாக 2017 யூன் 30 வரையிலும் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஈ) அலுவலகங்களிற்கான வசதிகள், சுகாதாரம் மற்றும் பிரசவ பராமரிப்பு, கேட்போர் கூடம் மற்றும் நூலகம் என்பவற்றை கொண்டிருந்த மத்திய மாகாணத்திலுள்ள ஹரிஸ்பத்துவ பிரதேச சபைக்கான பலநோக்குக் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் ரூபா 45.94 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயம் வடிவமைப்புத் தவறுகள் மற்றும் மண் புலனாய்வுகளின்றி நிர்மாண வேலைகள் ஆரம்பித்தமை காரணமாக ரூபா 60.18 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களின் பிரகாரம், கட்டிடத்தின் அடித்தளத்தினை வலுப்படுத்துவது தொடர்பில் மேலதிகக் கிரயம் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்தது.

(உ) ஊவா மாகாணத்தில் மீகஹகியூலவில் ரூபா 13.76 மில்லியன் கிரயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஸ் தரிப்பிடத்திற்கான நுழைவு வீதிகள் மற்றும் மின்சார விநியோகம் போன்ற வசதிகள் வழங்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், நுழைவு வசதிகளை வழங்குவதற்காக காணியை கொள்வனவு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக பிரதேச சபையால் ரூபா 9.15 மில்லியன் மேலதிகக் கிரயம் செலவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2017 மார்ச் 31 வரையிலும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பஸ் தரிப்பிடம் திறக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மேல் மாகணத்திலுள்ள பலிந்தனுவர பிரதேச சபையில் நீர் விநியோகத் திட்டம் நீர்த் தரம் மோசமடைந்தமை காரணமாக பயனற்றிருந்தது. மேலும், நீரோடைக்கு அண்மையில் குடியிருக்கும் மக்களை வெளியேற்றுவதற்கும் மாசடைதலுக்கெதிராக நீர் வளத்தை பாதுகாப்பதற்கும் பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 360 குடும்பங்களிற்காக வெளி மூலகங்களிலிருந்து குடிநீரை வழங்குவதற்கு செயற்திட்டத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 28.62 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், மேல் மாகாணத்திலுள்ள களுத்துறை மாவட்டத்தின் டிக்லன்ட நீர் விநியோகத் திட்டத்தின் இயலளவு ரூபா 28.62 மில்லியன் கிரயத்தில் விஸ்தரிக்கப்பட்ட போதிலும் அதன் நீரின் தரம் கழிவு நீர் கலந்தமை தொடர்பான பக்ரீறியா தாக்கங்கள் காரணமாக அருந்துதல் நோக்கத்திற்காக பொருத்தமற்றிருந்தது.

(எ) களுத்துறை மாவட்டத்திலுள்ள றெமுனவில் நீர் விநியோகத் திட்டம் மின்சாரத்தின் குறைந்த வோல்ரேஜ் காரணமாக ஆக்கபூர்வமாக தொழிற்பட்டிருக்கவில்லை. மேலும், நீர் விநியோகத் திட்டத்தின் திட்டமிடல் கட்டத்தில் மானி வாசிப்புக்கள், முறைமை பராமரிப்பு, பயனாளிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணம் தொடர்பில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணுதல் போன்றவற்றிற்காக மதுரவல பிரதேச சபையால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாகாண செயற்திட்டப் பணிப்பாளர் ஆகியோர் நீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு நோக்கங்களிற்காக உரிய பிரதேச சபையின் 03 உத்தியோகத்தர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர் என விளக்கமளித்திருந்த போதிலும் அந் நோக்கத்திற்காக எந்த உத்தியோகத்தர்களும் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கவில்லை என்பது கள பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) தென் மாகாணத்தில் செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட புதிய நூலகக் கட்டிடங்களிற்காக தளபாடம் விநியோகிப்பதற்கான ஒப்பந்தம் அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 22.64 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 2.51 மில்லியன்

பெறுமதியான 158 புத்தக இறாக்கைகள் மாத்திரமே 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்டிருந்தன. உண்மையான தேவைப்பாடுகளை மதிப்பிடாமல் அளவீட்டுப் பட்டியலில் மேற்கொள்ளப்பட்ட குறிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் விநியோகிக்கப்பட்ட புத்தக இறாக்கைகள் குறித்த நோக்கத்திற்கு பொருத்தமானதாக காணப்படவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பூர்த்தி செய்யப்பட்டு உள்ளூராட்சி சபைகளிற்கு கையளிக்கப்பட்ட சிவில் நிர்மாண வேலைகள் நீண்டகாலமாக விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேல் மாகாணத்திலுள்ள திவுலபிட்டிய மற்றும் தொடன்கொட பிரதேச சபைகள், மத்திய மாகாணத்திலுள்ள ரத்தோட்ட, நாவுல மற்றும் வில்கமுவ பிரதேச சபைகள் மற்றும் வடமத்திய மாகாணத்திலுள்ள கல்கமுவ, திரப்பனே மற்றும் இபொலோகம பிரதேச சபைகள் என்பவற்றிற்காக ரூபா 402.24 மில்லியன் மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நிர்வாகக் கட்டிடங்கள் பொதுமக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்படாமல் 2017 யூன் 30 இல் உள்ளவாறு 01½ ஆண்டுகளிற்கு மேலாக விளைவற்றிருந்தன.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்டதற்கு மேலதிகமாக, செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் சில பகுதிகள் உரிய நோக்கங்களிற்காக உரிய உள்ளூராட்சி சபைகளால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என கள பரீட்சிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. ஆகையால், மேல் மாகாணத்திலுள்ள பியகம மற்றும் மதுரவல பிரதேச சபைகள், சப்ரகமுவ மாகாணத்திலுள்ள அயகம பிரதேச சபை மற்றும் மத்திய மாகாணத்திலுள்ள கண்டி கடவத் சதர மற்றும் கங்காவத்த கொரள பிரதேச சபைகள் என்பவற்றிற்காக நிர்மாணிக்கப்பட்ட பலநோக்குக் கட்டிடங்களின் கேட்போர் கூடங்கள் 2017 யூன் 30 இல் உள்ளவாறு விளைவற்றிருந்தது. மேலும், தென் மாகாணத்திலுள்ள திஸ்ஸமஹாராம பிரதேச சபை, சப்ரகமுவவிலுள்ள அயகம பிரதேச சபை ஊவா மாகாணத்திலுள்ள பண்டாரவளை பிரதேச சபை மற்றும் வடமத்திய மாகாணத்திலுள்ள கெபித்திகொலாவ பிரதேச சபை என்பவற்றிற்காக நிர்மாணிக்கப்பட்ட வாராந்தச் சந்தைகளிலுள்ள கடைகள் 2017 யூன் 30 இல் உள்ளவாறு விளைவற்றிருந்தன.

(இ) ரூபா 16.51 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட வில்கமுவ பிரதேச சபையின் மயானம் பொதுமக்கள் கேள்வி குறைவாக இருந்தமையால் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தன. புதைக்கும் காணிகள் அல்லது சுடலைகளாக பயன்படுத்துவதற்கு பிரதேசத்திலுள்ள காணிகளின் கிடைப்பனவு, குறைந்த சனத்தொகை அடர்த்தி மற்றும் அப்பகுதியில் வாழும் மக்களின் நிதி இயலாமை போன்ற காரணிகள் மாயானத்தை நிர்மாணிப்பதற்கான தீர்மானத்தைப் பெறும் நேரத்தில் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டிருந்தது.

**3.5 சர்ச்சைத் தன்மையான விடயம்**

மத்திய மாகாணத்திலுள்ள யட்டவத்த பிரதேச சபையால் பலநோக்கு கட்டிடத்திற்காக வேண்டுதல் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் உரிய பிரதேச சபையால் ரூபா 43.91 மில்லியன் கிரயத்தில் அக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் பிரதேச சபையின் முதன்மைத் தேவைகள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை இது சான்றுபடுத்தியிருந்தது